**தி/தி/புனித மரியாள் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**மூன்றாம் தவணைப் பரீட்சை– 2022**
**கத்தோலிக்க திருமறை**

**தரம் - 09** **நேரம் - 1 1/2 மணி**
**சுட்டெண் - ………………**

## பகுதி – I

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. பின்வருவனவற்றுள் புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டு இலக்கியம்
 1. திருவெளிப்பாடு 2. தானியேல் 3. எண்ணிக்கை 4. திருப்பாடல்

2. திருத்தூதர் பணி நூலில் எத்திருத்தூதர்களினுடைய பணிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
 1. யோவான், பேதுரு 2. பேதுரு, யாக்கோபு 3. பேதுரு, பவுல் 4. பார்த்தலேமியு, யூதாஸ்

3. இஸ்ராயேல் மக்களின் செபப்புத்தகமாகவும், பாமாலையாகவும் கொள்ளப்பட்ட நூல்
 1. திருவிவிலியம் 2. திருப்பாடல்கள 3. நீதிமொழிகள் 4. இனிமைமிகு பாடல்

4. "கருக்கலைப்பு சிறுவர் கொலையாகும், கொடூரமான செயலாகும்". இக் கூற்று காணப்படுவது
 1. க.தி.ம.2271 2. க.தி.ம.2272 3. க.தி.ம.2273 4. க.தி.ம.2274

5. தவறான நூல்களை வாசித்தல், ஆபாசப் படங்கள், திரைப்படங்கள் போன்றவற்றைப் பார்த்தல் என்பன எத்தனையாம் கட்டளையை மீறுகின்ற செயலாகும்?
 1. 1ம் கட்டளை 2. 5ம் கட்டளை 3. 6ம் கட்டளை 4. 7ம் கட்டளை

6. "இறக்க நேர்ந்தாலும் இறை வாழ்வை இழந்து விட மாட்டேன்". இக் கூற்றுடன் தொடர்புடைய புனிதை
 1. புனித மரிய கொறற்றி 2. புனித அக்னஸ் 3. புனித லூசியா 4. அன்னை மரியா

7. கார்மேல் மலை மீது பலி ஒப்புக்கொடுத்த இறைவாக்கினர்
 1. எலியா 2. எலிசா 3. நாத்தான் 4. மீக்கா

8. இறைவனின் கட்டளைப்படி 300 பேரை யுத்தத்திற்காகத் தேர்ந்தெடுத்த நீதித்தலைவர் யார்?
 1. சிம்கார் 2. தெபோரா 3. கிதியோன் 4. சிம்சோன்

9. பின்வருவனவற்றுள் வான்வீடு செல்ல ஆயத்தம் செய்யும் அருளடையாளம்
 1. நோயிற்பூசுதல் 2. உறுதிப்பூசுதல் 3. ஒப்புரவு 4. தேவ நற்கருணை

10. நிலைவாழ்வை இழந்து விடுவது எத்தகைய தண்டனையாகும்?
 1. அநித்திய தண்டனை 2. நித்திய தண்டனை
 3. உத்தரிப்புத் தண்டனை 4. அசாதாரண தண்டனை

(10x2= 20 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1. இறைவனின் அருளைப் பெற்றவர்கள் மகிழ்ச்சியால் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் இரண்டை எழுதுக.
2. வரலாற்று நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. “தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்”. யாரால்? யாருக்கு? யாரைக் குறித்துக் கூறப்பட்டது?
4. ஆண் பிள்ளைகளினதும், முதல் நன்மை பெறும் பிள்ளைகளழனதும் பாதுகாவலராகக் கருதப்படுபவர் யார்?
5. செபத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
6. உடல் பரத்தமைக்கு அல்ல, கிறிஸ்துவுக்கே எனப் புனித பவுல் யாருக்கு அறிவுரை வழங்குகின்றார்?
7. நீதித் தலைவர்கள் இருவரைப் பெயரிடுக.
8. ஒத்தமை நற்செய்தி நூல்கள் யாவை?
9. மாற்கு நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயரொன்றைக் குறிப்பிடுக.
10. யோவான் நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி யாது?

(10x2= 20 புள்ளிகள்)

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**(I)**

I. திருவிவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
II. பழைய ஏற்பாட்டு ஞான நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
III. இறைவார்த்தையை வாசித்து தியானிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் 5ஐ எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

**(II)**

I. தலையாய பாவங்கள் 5ஐ குறிப்பிடுக.
II. விண்ணை நோக்கிக் கூக்குரலிடும் பாவங்கள் மூன்று எழுதுக.
III. தலையாய பாவங்களை வெல்வதற்கு உம்மால் செய்யக்கூடிய செயல்கள் 5ஐ குறிப்பிடுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

**(III)**

I. பாவிகள் மன்னிப்புப் பெறுவர் என்பதை உறுதிப்படுத்த திருவிவிலியத்திலுள்ள 2 உவமைகளைக் குறிப்பிடுக.
II. புனித அகுஸ்தீனின் வாழ்விலிருந்து நீர் பெறும் முனமாதிரிகைகள் மூன்றை எழுதுக.
III. தூய ஆவியானவருக்கு எதிரான பாவங்களை வெற்றி கொள்ள நீர் உம்மிடம் வளர்த்துக் கொள்ள வேண்டிய நற்பண்புகள் 5ஐ குறிப்பிடுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

**(IV)**

**சிறுகுறிப்பு எழுதுக.**

1. புனித மரிய கொரற்றி
2. புனித அக்னஸ்
3. புனித டொமினிக் சாவியோ

(3x10= 30 புள்ளிகள்)